# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2170/8 - 2020 අප්‍රේල් මස 11 වැනි සෙනසුරාදා - 2020.04.11

*2170/8 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 40/1973*(I)

### *(222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டம்*

*(222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 3 ஆம் பிரிவுகளின் கீழ் சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**பவித்ரா வன்னிஆராச்சி,**
சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2020, ஏப்பிறல் 11.*

**ஒழுங்குவிதிகள்**

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறாக, 1925 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய 7481 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தானியங்களைக் களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகளும் அங்கிலொஸ்டோமியாசிஸ் தொடர்பான ஒழுங்குவிதிகளும் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது–

1. அதன் 46ஆம் ஒழுங்குவிதியில், "மேற்போந்த விதியில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் நோயினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் நோயினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

1A - PG 4942 — 517 (2020/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. அதன் 47 ஆம் ஒழுங்குவிதியில், "45 ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்படும் நோய்களில் எவையேனும் ஒன்று காணப்படுவதுடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் நோய் காணப்படுவதுடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

3. அதன் 48 ஆம் ஒழுங்குவிதியில், "45 ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்படும் நோய்களில் எவற்றினாலும் பாதிக்கப்பட்ட ஆளெவரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நோயினால் பாதிக்கப்பட்ட ஆளெவரும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

4. அதன் 61 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்து பின்வரும் புதிய ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும்-

"61அ. கொறோனாவைரஸ் நோய் 2019 (கொவிட்-19) இனால் இறந்துள்ள ஆளொருவரின் பூதவுடலின் தகனம்-

(1) அறுபத்தோராம் மற்றும் 62 ஆம் ஏற்பாடுகள் எதுஎவ்வாறிருப்பினும், கொறோனாவைரஸ் நோய் 2019 (கொவிட்-19) இனால் இறந்துள்ள அல்லது இறந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படும் ஆளொருவரின் பூதவுடல் சுகாதாரப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விடுக்கப்படும் பணிப்புகளுக்கு இணங்க -

(அ) ஏதேனும் சாத்தியமான உயிரியல் அச்சுறுத்தலைத் தடுக்கும் நோக்கத்திற்கென முழுமையாக எரிவதற்கென ஆகக் குறைந்தது நாற்பத்தைந்து நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை 800 க்கும் 1200 க்குமிடையிலான பாகை செல்சியஸ் வெப்ப நிலையிலும்; அத்துடன்

(ஆ) அத்தகைய அதிகாரியின் மேற்பார்வையின்கீழ் முறையான அதிகாரியினால் அங்கீகரிக்கப்படும் சுடலை அல்லது இடத்திலும்,

தகனம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆளெவரும், கொறோனாவைரஸ் நோய் 2019 (கொவிட்-19) இனால் இறந்துள்ள அல்லது இறந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படும் ஆளொருவரின் பூதவுடலை முறையான அதிகாரியினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் தகனத்திற்கான அவசிய கடமைகளை பொறுப்பேற்கின்ற ஆட்கள் தவிர்ந்த வேறெவரேனும் ஆளுக்கு கையளித்தலாகாது.

(3) அத்தகைய சுடலை அல்லது இடத்தில் பூதவுடலைக் கையாளுகின்ற ஆட்களினால் பயன்படுத்தப்படும் உடை மற்றும் மீளபயன்படுத்தப்படற்பாலதல்லாத தனிப்பட்ட பாதுகாப்பு கருவிகள் தகனத்தின்போது சவப்பெட்டியுடன் அவற்றை இடுவதன் மூலம் எரிக்கப்படுதல் வேண்டும்.

(4) மீளபயன்படுத்தப்படற்பாலதான கருவியானது சுகாதாரப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விடுக்கப்படும் பணிப்புகளுக்கு இணங்க முறையாக தூய்மையாக்கப்படுதலும் கிருமி நீக்கப்படுதலும் வேண்டும்.

(5) பூதவுடலின் சாம்பலானது, உறவினரின் வேண்டுகோளின் பேரில் அத்தகைய உறவினருக்கு கையளிக்கப்படலாம்.".

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.